# பணியாளர்களுக்கான பாதுகாப்பு

COVID-19 காலத்தின்போது பணியிடத்தில் தங்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ள உதவும் பணியாளர்களுக்கான தகவல்

## பணியாளராக உங்கள் உரிமைகள்

- பாதுகாப்பான பணியிடம் மற்றும் உங்கள் ஆரோக்கியம் & பாதுகாப்பிற்கு ஆபத்து இல்லாத பணியிடத்திற்கான உரிமை
- பாதுகாப்புக் கலந்துரையாடல்களில் பங்கேற்கும் உரிமை
- மொழிபெயர்ப்பாளரை அணுகுவது உட்பட நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியில் தகவல் & பயிற்சி பெறுவதற்கான உரிமை
- ஆரோக்கியம் & பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளைப் பற்றி உங்கள் மேலாளர், சுகாதாரம் & பாதுகாப்பு பிரதிநிதி அல்லது WorkSafe யிடம் பேசுவதற்கான உரிமை
- பணியில் உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கத் தேவையான கண்காணிப்பைப் பெறுவதற்கான உரிமை

## உங்களுக்குப் பணிவழங்குபவரின் பங்கு

- சாத்தியமுள்ள இடங்களில் எல்லாம் பாதிப்பைக் குறைக்கும்பொருட்டு, COVID-19 ஆபத்துகளைக் கண்டறிந்து, அதன் ஆபத்துகளைக் கட்டுப்படுத்துதல்
- தேவைக்கேற்ப, பொருத்தமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களைப் பணியாளருக்கு வழங்குதல்
- பணியிடத்தில் COVID-19 தொற்றுக்கு உள்ளானதாக உறுதிப்படுத்தப்பட்ட WorkSafe பணியாளர்களைக் குறித்து தெரிவித்தல்
- COVID-19 பாதுகாப்பு குறித்த தெளிவான தகவல், அறிவுறுத்தல் மற்றும் பயிற்சியை வழங்குதல்
- பணியிடங்களைப் பாதுகாப்பான நிலையிலும், ஆரோக்கியம் & பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தாத நிலையிலும் வைத்திருத்தல்
- COVID-19 உட்பட பாதுகாப்பு விஷயங்கள் குறித்து, பணியாளர்கள் மற்றும் பணியிட சுகாதாரம் & பாதுகாப்புப் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசித்தல்

ஆஸ்திரேலியச் சட்டத்தின் கீழ், **புலம்பெயர்ந்த பணியாளர்கள் மற்றும் விசா வைத்திருப்பவர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும்** பாதுகாப்பற்ற பணி நடைமுறைகளில் பணியாற்ற மறுப்பதற்கான உரிமைகளையும் பாதுகாப்பையும் கொண்டுள்ளனர்

## உங்களுக்காக உதவி மற்றும் ஆலோசனை கிடைக்கிறது

உங்களுக்கு உதவி தேவைப்பட்டாலோ, உங்கள் பாதுகாப்பு மற்றும் பணியாளர் உரிமைகள் பற்றிய கூடுதல் தகவல் தேவைப்பட்டாலோ, நீங்கள் **இலவச மற்றும் இரகசிய ஆலோசனையை** அணுக முடியும்.

அனைத்துப் பணியிடங்களையும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதே WorkSafe Victoria வின் நோக்கமாகும். உங்கள் சுகாதாரம் & பாதுகாப்பு உரிமைகள் பற்றிய உதவிக்கு:

**1800 136 089**

www.worksafe.vic.gov.au

உங்கள் பணியிட உரிமைகள் பற்றிய உதவிக்கு:

Fair Work Ombudsman: **13 13 94**
Migrant Workers Centre: **03 9659 3516**
JobWatch: **03 9662 1933**

COVID-19 தகவலுக்கு, coronavirus.vic.gov.au/translations வலைத்தளத்தைப் பார்க்கவும்:

coronavirus.vic.gov.au/translations

அனைத்துச் சேவைகளின் **மொழி விளக்கத்திற்கு 131 450**ஐ அழைக்கவும்

அக்டோபர் 2020 அன்று உருவாக்கப்பட்டது. கிளிக் செய்யத்தக்க வலைத்தள இணைப்புகள் ஆவணத்தில் உள்ளன. உங்கள் பின்னூட்டத்தை வரவேற்கிறோம், community@worksafe.vic.gov.au எனும் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ளவும்

# பணியாளர்களுக்கான COVID-19 பாதுகாப்பு

கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்



உங்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டாலோ, இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று இருந்தாலோ வீட்டில் இருக்கவும்: காய்ச்சல், சளி, வியர்த்தல், இருமல், தொண்டைக் கரகரப்பு, மூச்சு விடுவதில் சிரமம், மூக்கு ஒழுகுதல், வாசனை உணர்வில் அல்லது சுவையறிதலில் மாற்றம்



நீங்கள் அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றை உணர்ந்தால் COVID-19 சோதனையை இலவசமாகச் செய்துகொண்டு, வீட்டில் சுய தனிமைப்படுத்திக் கொள்ளவும். சோதனை செய்யும் இடங்களை அறிய, coronavirus.vic.gov.au/translations எனும் வலைத்தளத்தைப் பார்க்கவும்



சுய தனிமைப்படுத்தல் அல்லது நோய் தொற்றுத்தடுப்பு என்பது வெளியில் செல்வது பாதுகாப்பானது என்று DHHSஆல் அறிவுறுத்தப்படும் வரை நீங்கள் வீட்டில் கட்டாயமாக இருக்கவேண்டும் என்பதாகும். உங்களுக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டால் உங்கள் மருத்துவரைத் தொடர்புகொள்ளவும்



நீங்கள் பணியித்தில் சோர்வாக உணர்கிறீர்கள் எனில், பணியை நிறுத்திவிட்டு, உங்கள் மேலாளரிடம் தெரியப்படுத்திய பின், நேரடியாக வீட்டுக்குச் செல்லவும்



அவசரநிலை இருந்தால் 000ஐ அழைக்கவும்



நீங்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்கும்போது அல்லது நோய் தொற்றுத்தடுப்பில் இருக்கும்போது, உங்களது உணவு அல்லது பிற தனிப்பட்ட தேவைக்கு DHHSஇன் ஹாட்லைன் 1800 675 398ஐ அழைக்கவும்



நீங்கள் COVID-19 உள்ள ஒரு நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருந்தால் நீங்களும் கண்டிப்பாகச் சோதனை செய்துகொள்ள வேண்டும், உங்கள் மேலாளரிடம் சொல்லிவிட்டு வீட்டில் நோய் தொற்றுத்தடுப்பில் இருக்கவும்




வீட்டில் நோய் தொற்றுத்தடுப்பில் இருப்பதற்கான வழக்கமான காலஅளவு 14 நாட்கள் ஆகும், ஆனால் இந்தக் காலஅளவு எப்போது வேண்டுமானாலும் மாறக்கூடும் என்பதால், எப்போதும் முதலில் DHHSஐப் பார்க்கவும்




நீங்கள் தனிமைப்படுத்தல் அல்லது நோய் தொற்றுத்தடுப்பில் இருக்கும்போது அனுமதி இல்லாமல் வீட்டை விட்டு வெளியில் சென்றால் **உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்**

## உதவி பெறுவதற்கான வழி

மேலும் தகவல் & ஆலோசனைக்கு COVID-19 ஹாட்லைன் **1800 675 398**ஐ அழைக்கவும். உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் முதலில் '0'ஐ டயல் செய்யவும்.

**இலவச & இரகசிய ஆதரவுச் சேவைகளை** எங்கே அணுகலாம் என்பதை அறிய, **யாரைத் தொடர்புகொள்வது** எனும் பக்கங்களைப் பார்க்கவும்.

அக்டோபர் 2020 அன்று உருவாக்கப்பட்டது. வெளிப்புற தளத்திற்கான எந்தவொரு இணைப்பும் உங்கள் தகவல் & சௌகரியத்திற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தத் தகவலானது ஒவ்வொரு தனிப்பட்ட சேவை நிறுவனத்திற்கும் சொந்தமானது மற்றும் அந்தச் சேவை நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

# யாரைத் தொடர்புகொள்வது

**COVID-19 காலத்தின் போது பணியில் எனது உரிமைகள் அல்லது சட்ட ஆலோசனையைப் புரிந்துகொள்ள எனக்கு உதவி தேவை**

வெவ்வேறு நிறுவனங்களிருந்து பல்வேறு இலவச மற்றும் இரகசிய சேவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மொழி ஆதரவு & மொழிபெயர்ப்புச் சேவைகள் TIS மூலம் கிடைக்கிறது. கிளிக் செய்யத்தக்க இணைப்புகள் உள்ளன.

**சம்பளம், விடுப்பு அல்லது வேலையை இழப்பது போன்ற எனது பணியிட உரிமைகள் தொடர்பான உதவி எனக்கு தேவை**
சம்பளம் மற்றும் விடுப்பு உட்பட, உங்கள் பணியிட உரிமைகள் குறித்த ஆலோசனைக்கு, Fair Work Ombudsman **வலைத்தளத்தை இங்கே** காணவும் அல்லது 13 13 94ஐ அழைக்கவும். உங்கள் மொழியில் உதவி பெற, **வலைத்தளத்திற்கு இங்கே** செல்லவும் வேலைவாய்ப்பு உரிமைகள் மற்றும் சட்டத்திற்கு, JobWatch **வலைத்தளத்தை இங்கே** காணவும் அல்லது 03 9662 1933ஐ அழைக்கவும்

WorkSafe

**பணியில் இருக்கும்போது எனது ஆரோக்கியம் & பாதுகாப்பைப் பற்றி கவலைப்படுகிறேன்**
உங்களது பணிவழங்குபவரை அல்லது உங்கள் சுகாதாரம் & பாதுகாப்பு பிரதிநிதியைத் தொடர்புகொள்ளவும். நீங்கள் WorkSafe Victoriaஐ 1800 136 089இல் தொடர்புகொள்ளலாம் அல்லது **வலைத்தளத்தை இங்கே** காணலாம். மொழிப்பெயர்க்கப்பட்ட **ஆதாரங்களை இங்கே** பார்க்கவும்

**ஒரு சட்டச் சிக்கல் தொடர்பாக உதவி அல்லது ஆலோசனை எனக்கு தேவை** உங்கள் சட்ட உரிமைகள் மற்றும் புலம்பெயர்வு பற்றிய தகவலுக்கு Victoria Legal Aid: **வலைத்தளத்தை இங்கே** காணவும் அல்லது 1300 792 387ஐ அழைக்கவும். அகதிகள், புலம்பெயந்தவர்கள் மற்றும் புகலிடம் கோரும் மக்களுக்கான சட்ட உதவிக்கு, அகதிகள் சட்ட **வலைத்தளத்தை இங்கே** காணவும் அல்லது 03 94130100ஐ அழைக்கவும்

**COVID-19 காரணத்தால் நான் வீட்டில் இருக்க வேண்டும். அவசரநிலை ஏற்பட்டால் நான் என் வீட்டை விட்டு வெளியே செல்லலாமா?**
உங்களுக்கோ உங்களுடன் வசிக்கும் ஒருவருக்கோ ஆரோக்கியம் & பாதுகாப்பில் ஆபத்து இருந்தால் நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லலாம். மேலும் தகவலுக்கு, coronavirus.vic.gov.au/translations வலைத்தளத்திற்குச் செல்லவும்

MIGRANT WORKERS CENTRE

நான் ஒரு புலம்பெயர்ந்த பணியாளர், விசா வைத்திருப்பவர் அல்லது சர்வதேச மாணவர், எனது பணியிட உரிமைகள் தொடர்பாக எனக்கு உதவி தேவை. ஆலோசனைக்கு Migrant Workers Centre **வலைத்தளத்தை இங்கே** காணவும் அல்லது 03 9659 3516ஐ அழைக்கவும். Fair Work **வலைத்தளத்தை இங்கே** காணலாம்

Interpreter

**மொழி ஆதரவுக்கு, இலவச மொழிபெயர்ப்பு & விளக்கச் சேவையை (TIS) தொடர்புகொள்ளவும்**

1. TIS நேஷனலுக்கு 131 450இல் டயல் செய்யவும்
2. உங்கள் மொழியைக் கூறவும், எ.கா. தமிழ், பின்னர் மொழிபெயர்ப்பாளருடன் இணைக்கும்வரை காத்திருக்கவும்
3. மொழிபெயர்ப்பாளருடன் இணைக்கப்பட்டதும், உங்கள் பெயர், நீங்கள் பேச விரும்பும் நிறுவனம் மற்றும் அவர்களைத் தொடர்புக்கொள்வதற்கான எண்ணைக் கூறவும்
4. நிறுவனத்துடன் இணைக்கும்வரை காத்திருக்கவும்

அக்டோபர் 2020 அன்று உருவாக்கப்பட்டது. வெளிப்புற தளத்திற்கான எந்தவொரு இணைப்பும் உங்கள் தகவல் & சௌகரியத்திற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தத் தகவலானது ஒவ்வொரு தனிப்பட்ட சேவை நிறுவனத்திற்கும் சொந்தமானது மற்றும் அந்தச் சேவை நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

# யாரைத் தொடர்புகொள்வது

வெவ்வேறு நிறுவனங்களிருந்து பல்வேறு இலவச மற்றும் இரகசிய சேவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மொழி ஆதரவு & மொழிபெயர்ப்புச் சேவைகள் TIS மூலம் கிடைக்கிறது. கிளிக் செய்யத்தக்க இணைப்புகள் உள்ளன.

**COVID-19 நேரத்தின் போது எனது நிதிகள், உணவு, வீட்டுவசதி அல்லது உணர்வு நலன் சார்பான ஆரோக்கியம் தொடர்பாக எனக்கு இலவச உதவி தேவை**





**நான் COVID-19 சோதனை செய்துகொள்ள வேண்டும் ஆனால் எனக்கு நோய்க்கால விடுப்போ விடுப்பு எடுத்துக்கொள்வதற்கான நேரமோ இல்லை** சோதனை முடிவுகள் வரும் வரை சுய தனிமைப்படுத்திக்கொள்வதற்கான பேமெண்ட்டுக்கு நீங்கள் ஒருமுறை தகுதி பெறலாம். ஆதரவிற்கு விண்ணப்பிக்க **coronavirus.vic.gov.au/translations** வலைத்தளத்தைக் காணவும் அல்லது 1800 675 398ஐ அழைக்கவும்



**எனது பணி அல்லது வருமானத்தை இழந்துவிட்டேன், எனக்கு உதவி தேவை**
நிதியுதவி மற்றும் பணி தேடுவதற்கான உதவிக்கு விக்டோரியா அரசாங்கத்தின் **coronavirus.vic.gov.au/translations** வலைத்தளத்தைக் காணவும்



**நான் ஒரு தற்காலிக அல்லது நிகழ்காலத்திற்கான விசா வைத்திருப்பவர் அல்லது சட்டரீதியான ஆவணமில்லாதவர். எனக்கு நிதியுதவி தேவை**
எக்ஸ்ட்ரீம் ஹார்டுஷிப் சப்போர்ட் (Extreme Hardship Support) திட்டம் மூலம் பேமெண்ட்டுகளுக்கு நீங்கள் தகுதி பெறலாம். Red Cross **வலைதளத்தை இங்கே** காணவும் அல்லது Brotherhood of St Laurenceஐ 9422 5650இல் அழைக்கவும்



**நோய் தொற்றுத்தடுப்பு அல்லது COVID-19 உள்ள ஒருவரைக் கவனிப்பதன் காரணமாக எனக்கு வருமானம் இல்லை** பெருந்தொற்று விடுப்பு பேரிடர்கால பேமெண்ட் (Pandemic Leave Disaster Payment) அல்லது பணியாளர் ஆதரவு பேமெண்ட் (Worker Support Payment) ஆகியவற்றுக்கு நீங்கள் தகுதி பெறலாம். Services Australia **வலைத்தளத்தை இங்கே** காணவும் அல்லது Services Australiaஐ 180 22 66இல் அழைக்கவும்



**நான் யாரோ ஒருவருடன் எனது உணர்வுகளைப் பற்றி பேச வேண்டும்**
உங்கள் மனநல வாழ்வைப் பற்றி ஒருவருடன் பேச வேண்டும் என்றால், நீங்கள் கொரோனாவைரஸ் மனநல ஆரோக்கிய ஆதரவுச் சேவையை (Coronavirus Mental Wellbeing Support Service) 1800 512 348இல் அழைக்கவும் அல்லது Beyond Blue **வலைத்தளத்தை இங்கே** காணவும். நீங்கள் உங்களின் மருத்துவரிடமும் பேசலாம் அல்லது Lifeline **வலைத்தளத்தை இங்கே** காணலாம் அல்லது 13 11 14ஐ அழைக்கலாம்



**உணவு, வீட்டுவசதி அல்லது உடைகள் தொடர்பான உதவி எனக்குத் தேவை**
ஆதரவுக்கு அணுக, Victorian Multicultural Commission **வலைத்தளத்தை இங்கே** காணவும். மாணவர்களுக்காக Study Melbourne **வலைத்தளத்தை இங்கே** காணவும்

**COVID-19 தகவலுக்கு** coronavirus.vic.gov.au/translations வலைத்தளத்தைக் காணவும் அல்லது COVID-19 ஹாட்லைன் 1800 675 398ஐ அழைக்கவும். ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு முதலில் 0ஐ டயல் செய்யவும். மொழிபெயர்க்கப்பட்ட தகவலுக்கு, coronavirus.vic.gov.au/translations வலைத்தளத்திற்குச் செல்லவும்

அக்டோபர் 2020 அன்று உருவாக்கப்பட்டது. வெளிப்புற தளத்திற்கான எந்தவொரு இணைப்பும் உங்கள் தகவல் & சௌகரியத்திற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தத் தகவலானது ஒவ்வொரு தனிப்பட்ட சேவை நிறுவனத்திற்கும் சொந்தமானது மற்றும் அந்தச் சேவை நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.